ஸ்ரீ:
ஸ்ரீமதே இராமானுஜாய நம:
ஸ்ரீமத் அநந்தார்ய மஹாகுரவே நம:
ஸ்ரீமத் வரவரமுனயே நம:



# ஸ்ரீ மதுரகவியாழ்வார் அருளிச் செய்த
# கண்ணிநுண்சிறுத்தாம்பு
# நான்காம் பாசுர வ்யாக்யான சாரம்

நஞ்ஜீயர், நம்பிள்ளை அருளிச் செய்த
வ்யாக்யானத்திலிருந்து திரட்டியது

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

அடியேன் மதுரகவி தாசன்
திருமலை குன்னபாக்கம் அனந்தாண்பிள்ளை வேங்கடார்யன்

http://www.acharya.org

ஸ்ரீ:
ஸ்ரீமதே இராமானுஜாய நம:
ஸ்ரீமத் அநந்தார்ய மஹாகுரவே நம:
ஸ்ரீமத் வரவரமுனயே நம:

# கண்ணிநுண்சிறுத்தாம்பு நான்காம் பாசுர வ்யாக்யான சாரம்

நஞ்சீயர், நம்பிள்ளை அருளிச் செய்த
வ்யாக்யானத்திலிருந்து திரட்டியது

நன்மையால் மிக்க நான்மறையாளர்கள்
புன்மையாகக் கருதுவராதலின்
அன்னையாய் அத்தனாய் என்னையாண்டிடும்
தன்மையான் சடகோபனென் நம்பியே

அர்த்தம்:
நற்குணங்களால் மேன்மை உடையவர்களாக விளங்கும், நான்கு வேதங்களிலும் தேர்ந்த வைதிகர்கள், என்னைத் தாழ்வே வடிவு கொண்டவனாகக் கருதுவார்கள். அதுவே காரணமாய், எனக்கு அன்னை, தந்தை, எல்லாமுமாகி என்னைக் கரையேற்றும் இயல்பைக் கொண்ட நம்மாழ்வார் எனக்குத் தலைவராவார்.

வ்யாக்யான சாரம்:
இத்தகைய நன்மையை எவ்வாறு பெற்றேன் என்று, நம்மாழ்வார் தமக்கு உபகாரம் செய்ததைக் கூறுகிறார். அவ்வாறு ஏன் உபகாரம் செய்ய வேண்டும் என்றால், நல்லவை அனைத்தும் கைவிடும்படி கீழ்மையனாகி நம்மாழ்வாரைப் பற்றினேன் என்கிறார்.

நன்மையால் மிக்க நான்மறையாளர்கள்:
பலவிதமான உயர்ந்த குணங்களையும், வேதத்தைச் செப்பியும், கடைப்பிடித்தும் வேதங்களையே செல்வமுமாகக் கொண்டும் இருக்கும் ஸ்ரேஷ்டர்களே நான்மறையாளர்கள்.

புன்மையாகக் கருதுவர்:
அப்படிப்பட்ட நான்மறையாளர்கள் இவரை கீழ்மையைக் கொண்டவராகக் கருதாமல் கீழ்மையே இவரெனக் கொள்வார்கள் என்கிறார். அறிவு முதிர்ச்சி உடையோரில் ஆழ்வாரைத் தவிர மற்றவர் அனைவரும் இவரைக் கைவிடும்படி இருப்பதே இவருடைய நிலை என்கிறார்.

நான்மறையாளர்கள் புன்மையாகக் கருதுவர்:
வேதங்களையே உபாசனை செய்து அதன் வாசனையிலேயே மூழ்கிக் கிடக்கும் அந்தணர்கள் இவரை புன்மை என்றொரு குணமுடையவராகக் கருதாமல் புன்மையே வடிவு கொண்டவராகக் கொள்வார்கள் என்கிறார்.

அன்னையாய் அத்தனாய் என்னையாண்டிடும்:
அப்படிப்பட்ட இவருக்கு தன்னை விட்டால் வேறு எவரும் இல்லை என்ற அளவில் நம்மாழ்வார் எல்லாவித உறவும் ஆனார் என்கிறார். வேறு ரக்ஷகர் எவரும் இல்லை என்னும் அளவுக்கு நம்மாழ்வாரே இவருக்கு எல்லாம் ஆனார். தாய், தந்தை, நாயகன் இவர்கள் செய்யும் அனைத்தையுமே நம்மாழ்வார் இவருக்கு செய்தார். அவ்வாறு நம்மாழ்வார் விஷயத்தில் எம்பெருமான் ஆனதைப்போல் இவர் விஷயத்தில் நம்மாழ்வார் ஆனார்.

தன்மையான்:
அத்தகைய உயர்ந்த தன்மையை நம்மாழ்வார் தம்முள் தாமாகவே கொண்டிருக்கிறார்.

நம்பியே:
நம்மாழ்வார் தம்முடைய குற்றங்களைப் போக்கடித்ததன்றி இவருடைய குற்றங்களையும் போக்கியதால், அவரைப் பூர்ணராகப் பேசுகிறார். ஒருவர் செய்வதை மற்றொருவர் செய்வதைப்போல் அல்லாமல், எல்லோரும் செய்வதை நம்மாழ்வார் தாம் ஒருவராகவே இவருக்கு செய்யும் பூர்த்தி உடையவராக இருக்கிறார். இப்படி தம்மைப் போன்ற தாழ்ந்தவரையும் உயர்த்தும் வண்ணம் நம்மாழ்வாருடைய பூர்த்தி உள்ளது என்கிறார்.

மதுரகவி ஆழ்வார் திருவடிகளே சரணம்
நஞ்சீயர் நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

அடியேன் மதுரகவி தாசன்
திருமலை குன்னப்பாக்கம் அனந்தாண்பிள்ளை வேங்கடார்யன்